ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 915 –1996 මාර්තු 15 වැනි සිකුරාදා – 1996.03.15

915 ஆம் இலக்கம் - 1996 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | – |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 64 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | – |
| பதவிகள் - வெற்றிடம் | – |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | – |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | – |
| நானாவித அறிவித்தல்கள் | – |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் **தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1996, மாச்சு 22 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1996, மாச்சு 08 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1996 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் தேதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மத்திய மாகாண மாகாண சபை

பின்வரும் நியதிச்சட்டம் 1995 ஒகத்து மாதம் 25 ஆந் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, அதற்கு 1996.02.10 ஆந் திகதி கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி. ஆர். ரணசிங்க,
சபை செயலாளர்,
மத்திய மகாண சபை

சபை செயலகம்,
மத்திய மாகாண சபை,
த. பெ. இல. 07,
பள்ளேகளை,
குண்டசாலை.
1996 ஆம் வருடம் பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி.

## மத்திய மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் இலக்கம் 02 ஐக் கொண்ட நூலக நியதிச் சட்டம்

மத்திய மாகாண சபைக்கும் முறையானதும் ஒழுங்கானதுமான நூலக சேவையினை ஆற்றவும், அதன் மூலம் பொது சமூகத்தின் மக்கள் பிரிவிற்குள் அனுபவத்தையும் தகவல்களையும் பெற்றுக் கொடுக்க உதவவும், விசேஷமாக மத்திய மாகாணத்தின் மக்கட் பிரிவின் அபிவிருத்திக்கான அனுபவத்தையும் தகவல்களையும் பெற்றுக் கொடுக்கவும், மத்திய மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தகவற் சேவை சம்பந்தமாக நடைமுறைப் படுத்தக்கூடிய விதத்தில் உதவுவதற்குமான ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தக்கூடிய நியதிச் சட்டமே இதுவாகும்.

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் அறிவிக்கப்படுகிறது :

சுருக்கப்பெயரும் அமுலாகும் திகதியும்

1. இந்நியதிச் சட்டம் மத்திய மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கம் கொண்ட நூலக நியதிச் சட்டம் எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்படுவதுடன், மத்திய மாகாண ஆளுநர்அவர்களால் உறுதிப்படுத்தும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

குறிக்கோள்.

2. மத்திய மாகாண சபை அதிகார பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பொது மக்கள் நூல் நிலையம், கல்வி நூல் நிலையங்கள் விசேட நூல் நிலையம் போன்றவற்றின் நடவடிக்கைகளை திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல், தொடர்புபடுத்துதல் போன்றவை பிரதான குறிக்கோளாகும்.

மத்திய மாகாணத்திற்கேற்ற நூல் நிலையங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், நூலக தொழிற் பயிற்சிக்கான திட்டங்களை வகுத்தலும், நடைமுறைபடுத்தலும், நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் பற்றிய ஒழுங்கு முறைகளை செய்தல், செயல் முறைத் திட்டங்களை விஸ்தரிப்பதற்கான திட்டங்களை வகுத்தலும், நடைமுறைப் படுத்தலும், நூலகச்செயற்சபைகளை நியமித்தலும், பதவி உயர்வு வழங்கலுக்குமான நியதிகள், பரீட்சை நியதிகளை திட்டமிடுதல்.

நூலக அனுகூல திட்டங்களை ஏற்படுத்துதல் மூலம் வளங்களைப் பகிர்ந்தளித்தல், மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் விபரங்களை முறைப்படுத்தல், உள்ளக நூல் நிலையப் பரிமாற்றங்களையும் ஒத்துமாறல் முறைகளையும் ஏற்படுத்துதல், நடமாடும் நூலகசேவைகளை ஏற்படுத்தலுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற வழி முறைகளை வகுத்தல், தகவல்களை வெளியிடுதல், மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதல், நூலக சேவை அபிவிருத்தியும் தேசிய விபரங்களை தெரிந்துகொள்ளல் பற்றிய ஆராய்ச்சியினை செய்தலும், புள்ளிவிபரங்களையும் விடயங்களை சேகரித்தலும், பயிற்சி பாசறைகளை நடத்துதல், ஒழுங்கமைக்கப்பட்ட தொழிநுட்ப சேவைகளை ஏற்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துதல்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நூல் நிலையங்களைப்பற்றி மதிப்பீடு செய்வதன் மூலம் சம்பந்தப்பட்ட நூல் நிலைய அபிவிருத்திக்கு ஏற்ற அறிவுரைகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும்.

பாவனையாளர்களுக்கு நூல் நிலையங்களின் மூலம் ஆகக்கூடிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நூல் நிலைய பரிசீலன்னை சம்பந்தமான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொடுத்தல், அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் வேலைத் திட்டங்களைப் பேணலும் நடைமுறைப்படுத்தலும், பிரதேசத்திற்குரிய கலாச்சாரத்தை தெளிவுப

டுத்தும் நூல்கள், கையேட்டுப்பிரதிகள், ஏட்டுச்சுவடிகள் போன்ற இலக்கிய ரீதியான உரிமைகளை பெற்றுக்கொள்ளல், ஆராய்ச்சி ரீதியான விஷேட வேலைத் திட்டங்களை ஏற்படுத்துதல், கலந்துரையாடல், கருத்தரங்குகளும், தீர்வுகளும், போட்டிகள், பேச்சுப் போட்டிகள், புத்தி ஜீவிகளின் அறிவுரைகள் போன்ற கூட்டமைப்பு நடவடிக்கைகள் மூலம் நூல் நிலைய அபிவிருத்திக்கான செயற்பாடுகளை ஏற்படுத்தும் நிறுவனமாக உருவாக்குதலும், சமூக விபர சேவைகளை ஏற்படுத்தும் நிலையமாக நூல் நிலையங்களை உருவாக்கல்.

உள்ளூராட்சி நிறுவனங்களுடன் வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் பொது மக்களுக்கு தேவையான செய்திகளை சேகரித்து வழங்கும், ஒழுங்குபடுத்தும், பகிர்ந்தளிக்கும் செய்தி மத்திய நிலையமாக நூல் நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலம் மனிதவள அபிவிருத்திக்கு உதவுதல்.

*மாகாண நூலக சேவைச் சபையினை நியமித்தல்*

3. இந்நியதிச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்காக இந்நியதிச் சட்டத்தில் இதற்கு மேல் அறிவிக்கப்படும் ஒழுங்கமைப்புக்கேற்ப —

(அ) மாகாண நூலகச் சேவைச் சபை
(ஆ) மாவட்ட நூலகச் சேவைச் சபைகள் மூன்று
(இ) பிரதேச செயலாளர் பிரிவுக்கென ஒவ்வொரு நூலகச் சேவை சபையினை அமைக்க வேண்டும்.

*மாகாண நூலகப் பணிப்பாளரையும் வேறு அதிகாரிகளையும் நியமித்தல்.*

4. (i) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும்பொறுப்புகளையும் கடமைகளையும் முறையான விதத்தில் செயற்படுத்துவதற்கு தேவையான கல்வி, தொழில் தகுதி, நிர்வாக திறமை, அனுபவம் பெற்ற மாகாண நூலகப் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொறுப்புக்களையும் கடமைகளையும் செயற்படுத்துவற்கும், தொடர்புபடுத்துவற்கும், காலத்திற்கு காலம் அதிகாரிகளையும், ஊழியர்களையும் நியமித்தல்.

(iii) இத்தலைப்பின் (i) ஆம் (ii) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்படும் சகல அதிகாரிகளும் தண்டநீதிக் கோவையின் கருத்துக்கேற்ப அரச ஊழியர்களாக கணிப்பிடப்பட வேண்டும்.

(iv) இந்நியதிச் சட்டத்தின்படி செயற்படும் எவராவது ஒரு அரச உத்தியோகத்தர் பொதுவாக செய்யும் அல்லது செய்யாமல் விடும் ஏதாவது விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக எவ்வித வழக்குத்தாக்குதல்களையும் செய்தல் முடியாத காரியமாயிருத்தல் வேண்டும்.

(v) இப்பிரிவின் கீழ் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் தமது அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகையிலும் கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுகையிலும் அமைச்சு செயலாளரினாலோ விதிக்கப்படும் பொது அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

## பகுதி I

### மாகாண நூலகச் சேவைச்சபை, மாவட்ட நூலகச் சேவை மண்டலங்கள் மற்றும் பிரதேச சேவை மண்டலங்கள் என்பவற்றை அமைத்தல்

*மத்திய மாகாணத்தின் நூலகச் சேவை மண்டலங்களை அமைத்தல்.*

5. (i) மத்திய மாகாணத்தின் நூலகச் சேவை மற்றும் தகவல் சேவைகள் தொடர்பான திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், ஒன்றிணைத்தல் ஆகிய விடயங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குமுகமாக இதன் பின் "மண்டலம்" என்பது

" மத்திய மாகாணத்தில் நூலக சேவை மண்டலம்" என அழைக்கப்படும் ஒரு மண்டலத்தை அமைக்கலாம்.

இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துமுன் மாகாணசபையின் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சர் அவர்களால் முன்வைக்கப்படல் வேண்டும்.

(ii) அம்மண்டலம் —

(அ) அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் தலைவர்,
(ஆ) செயலாளர், உள்ளூராட்சி,
(இ) உள்ளூராட்சி ஆணையாளர்,
(ஈ) செயலாளர் கல்வி,
(உ) மாகாண கல்வி பணிப்பாளர்,
(ஊ) இலங்கை தேசிய நூலக சேவை மண்டலத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் குறித்துரைக்கப்படும் ஒரு பிரதிநிதி,
(எ) தலைவர், இலங்கை நூலக சங்கம் அல்லது அவரால் குறித்துரைக்கப்படும் பிரதிநிதி ஒருவர்,
(ஏ) மாகாண நூலக பணிப்பாளர்,
(ஐ) நூலக அதிபர், பேராதனை பல்கலைக்கழகம்,

(ஒ) நூலக அதிபர் மாகாண மத்திய நூலகம்,
(ஓ) நூலக நடவடிக்கை சம்பந்தமாக ஆர்வம் காட்டும், உள்ளூராட்சி அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று அறிவாளிகள்.

(iii) அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படும் மூவரில் பொருத்தமான ஒருவர் மண்டலத்தின் தலைவராக நியமிக்கப்படல் வேண்டும்.

மாகாண நூலக பணிப்பாளர் மண்டலத்தின் செயலாளர் பதவியை வகித்தல் வேண்டும்.

*மண்டலத்தின் கடமைகளும் பொறுப்புகளும் கட்டளைகளும் ஒழுங்கு வழிகளும்.*

6. மண்டலத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிச்சயித்தலும் ஒழுங்கு மண்டலத்தின் கூட்டத் தொடர்களில் பங்குபற்றும் அங்கத்துவ எண்ணிக்கையும் இச்சட்ட வாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அமைச்சரினால் நிச்சயிக்கப்பட வேண்டும்.

7. மண்டலத்தின் கூட்டத்தொடர்களுக்கான நடவடிக்கை முறைகளையும் அமர்வுக்கான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அமைச்சரினால் கட்டளைகளும் ஒழுங்குவிதிகளும் பிறப்பிக்கப்படலாம்.

*மாவட்ட நூலகச் சேவை மண்டலங்களை தாபித்தல்.*

8.(i) மத்திய மாகாணத்திற்குரிய மாவட்டங்களில் நூலகச் சேவையையும் தகவல் சேவையையும் புத்துயிரூட்டவும், அபிவிருத்திச் செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும், நிர்வாகம் செய்வதற்கும் மாகாண நூலகச் சேவை மண்டலத்துடன் ஒன்றிணைந்து தொடர்பான விடயங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரினால் நிச்சயிக்கப்படும் ஒவ்வொரு நிர்வாக மாவட்டங்களுக்குமான " மாவட்ட நூலக சேவை மண்டலம்" அமைக்கப்படல் வேண்டும்.

(ii) மாவட்ட நூலகச் சேவை கீழ் காணப்படும் ஆட்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :—

(அ) மாவட்ட செயலாளர்,
(ஆ) உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
(இ) பிரதிக்கல்வி, பணிப்பாளர்,
(ஈ) மாநகரசபை ஆணையாளர் (மாநகர சபை),
(உ) மாவட்ட மத்திய நூலக அதிபர்,
(ஊ) சமூக அபிவிருத்தி அதிகாரி/ உள்ளூராட்சி பிரதி ஆணையாளர்,
(எ) கலாச்சார அதிகாரி,
(ஏ) நூலக நடவடிக்கை சம்பந்தமான பொறுப்புடன் செயற்படும் அமைச்சர் அவர்களால் பெயர் குறிப்பிடப்படும் மூவர்.

(iii) அமைச்சர் அவர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட மூவரில் பொருத்தமான ஒருவரை தலைவராக நியமிக்கப்படல் வேண்டும்.
மாவட்ட மத்திய நூலக அதிபர் செயலாளராக வேண்டும்.

*மாவட்ட நூலகச் சேவை பொறுப்புக்களும் கடமைகளும்*

9. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாவட்ட நூலகச் சேவை மண்டலத்தின் கடமைகளையும், பொறுப்புக்களையும், குழு அமர்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை போன்றவையும் அமைச்சர் அவர்களின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*மாவட்ட நூலகச் சேவை மண்டலங்களின் உத்தரவுகளும் ஒழுங்குவிதிகளும்.*

10. சகல மாவட்ட நூலகச்சபைகளினாலும் அக்கமிட்டி அமர்வுகளின் நடவடிக்கை விதிமுறைகளும் அவ்வவ் அமர்வுகளின் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு கட்டளைகளும் ஒழுங்குவிதிகளும் இயற்றலாம்.

*பிரதேச சேவை நூலக மண்டலங்களை ஸ்தாபித்தல்.*

11. (i) மத்திய மாகாண பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் நூலகச் சேவைகளையும் தகவல் சேவைகளையும் புத்துயிருடன் திகலவும், அபிவிருத்தி செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும், நிர்வாகம் செய்வதற்கும் தொடர்பான விடயங்களில் மாவட்ட நூலகச் சேவை மண்டலத்திற்கு சிபார்சுகளை வழங்குவதற்குமான அமைச்சரினால் நிச்சயிக்கப்படும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் " பிரதேச சேவை மண்டலம் " ஒன்று தாபிக்கப்படலாம்.

(ii) அக்கமிட்டி கீழ்வருவோரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :—

(அ) சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் (தலைவர்),
(ஆ) சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன செயலாளர்,
(இ) உள்ளூராட்சி அதிகாரப் பிரிவின் மத்திய நூலக அதிபர்,
(ஈ) பிரதேச கல்விப் பணிப்பாளர்,
(உ) கல்வி பணிப்பளரால் பெயர் குறிப்பிடப்படும் மத்திய மகா வித்தியாலயங்கள்/ மகா வித்தியாலயங்கள் / பிரிவினா/ அதிபர்கள் மூவர்,
(ஊ) கலாச்சார உத்தியோகத்தர்,

(எ) சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.
(ஏ) சகல உள்ளூராட்சி நிறுவனத்தால் பெயர் குறிப்பிடப்படும் நூலக அதிபர்கள் மூவர்.
(ஐ) அமைச்சரவர்களால் பெயரிடப்படும் நூலகம் சம்பந்தமாக ஆர்வம் காட்டும் அறிவாளிகள் மூவர்.
(ஒ) அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் வாசக சமாஜத்திற்கு சம்பந்தப்பட்ட இரு மாணவர்கள்

(iii) பிரதேச மத்திய நூலக அதிபர் இந்த மண்டலத்தின் செயலாளராக இருக்க வேண்டும்.

12. மண்டலத்தின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் கடமைகளும். அமர்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும் இச்சட்ட வாக்கத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டளைகள் பிறப்பிப்பதன் மூலம் நிச்சயிக்கப்படல் வேண்டும். சபையின் செயற்பாடுகள்

13 மண்டலத்தின் கூட்டங்கள் பற்றிய நடவடிக்கை முறைமைகளையும், அவ்வமர்வுகளின் கடமைகளையும் மேம்படுத்துவதற்கு மண்டலத்தினால் கட்டளைகளும் ஒழுங்கு விதிகளும் பிறப்பிக்கப்படலாம். மண்டலத்தின் கட்டளைகளும் ஒழுங்கு விதிகளும்.

14.(i) அமைச்சரினால் மண்டலத்திற்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் காலஞ் செல்வதால் அல்லது கேட்டு விலகிக்கொள்வதால் அல்லது விலக்கப்படுவதால் அல்லது ஏற்கனவே பதவி வெற்றிடம் ஏற்பட்டாலேயொழிய அங்கத்துவ காலம் 3 வருடங்களாக இருத்தல் வேண்டும். மண்டலத்திற்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் பதவிக்காலம்

(ii) மண்டலம் ஒன்றிற்கு அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர் ஒருவர் ஏதாவது ஒரு பதவியிலிருந்து விலகுவது சரியானது என அமைச்சர் கருதினால், காரணம் காட்டி அவரால் அவ்வாறு செய்யலாம்.

(iii) காலஞ் செல்வதால், கேட்டு விலகுவதால் அல்லது விலக்கப்படுவதால் பதவி வெற்றிடமாகும் அங்கத்துவ இடத்திற்கு நியமிக்கப்படும் ஆளொருவர் அவ்வாறு வெற்றிடமாகிய பதவியை முன்னைய அங்கத்தவர் வகித்த பதவிக் காலத்திலிருந்து எஞ்சிய காலத்திற்கு மாத்திரம் பதவி வகித்தல் வேண்டும்.

(iv) காலம் முடிவடைந்து பதவி வெற்றிடம் ஏற்படும் போது அப்பதவியைய வகித்த அங்கத்தவர் ஒருவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமைப் பெறவேண்டும்.

15. ஆளொருவர், தகைமைகள்.

(அ) தகுந்த அதிகாரம் உடைய நீதிமன்றம் ஒன்றினால் புத்தி சுவாதீனமானவர் என தீர்மானிக்கப்பட்டால் அல்லது ஏற்கனவே புத்தி சுவாதீனமானவர் என தீர்மானிக்கப்பட்டவர்.
(ஆ) தகுந்த அதிகாரமுடைய நீதிமன்றமொன்றினால் சீரழிந்தவர் அல்லது வங்கி முறிவைப் பெற்றவர் என தீர்ப்பு வழங்கப்பட்டால் அல்லது ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டவர்.

(இ) புத்தகங்கள், வார சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், நூலக மற்றும் தகவல் சேவைக்கு தொடர்புடைய உபகரணங்களும் பொருட்களும் வாங்கும்போது, பகுதிகள் சேகரிக்கையில், விற்பனையின்போதோ அல்லது உற்பத்தியின்போதோ நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ தொடர்பு வைத்திருப்பின் அல்லது,

(ஈ) நடத்தைத் துஷ்பிரயோக தொடர்பான ஏதாவது ஒரு குற்றத்திற்காக கடந்த ஐந்து வருடத்தில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பெற்றவர்.

(உ) குற்றச்செயல் குற்றத்திற்குட்பட்டு மூன்று மாதங்களுக்கு குறையாத சிறைவாசத்தை பெற்றோ அல்லது அக்குற்றத்திற்காக ரூபா 500 இற்கு மேற்பட்ட தண்டனைக்குட்பட்டவரோ,

(ஊ) அங்கத்துவம் வகிக்கும் காலத்தில் பாராளுமன்ற அல்லது மாகாணசபை உறுப்பினராகவோ அல்லது உள்ளூராட்சிமன்ற உறுப்பினராகவோ,

(எ) காரணங்காட்டாது தொடர்ச்சியாக மண்டலக் கூட்டங்களுக்கு மூன்று தடவைகள் சமூகமளிக்காத ஒருவர் எந்தவொரு நூலக சேவை மண்டலத்திலும் அங்கத்துவம்பெற தகுதியுடையவராகார்.

## பகுதி II

### மாகாண நூலகங்களை நிறுவுதலும் நிர்வகித்தலும்

16. மத்திய மாகாண சபையால் நூலகம் சம்பந்தமாக வருடாந்தம் நிதி ஒதுக்கீடு செய்யப்படக்கூடும். மாகாண நூலகசேவை மண்டலத்தின் ஆலோசனையின்படி குறிப்பிட்ட அளவிற்கு ஏற்ப வருடந்தோறும் நூலகங்களுக்கு நிதி வழங்கப்படக் கூடும். இதற்கு மேலும் மத்திய அரசினாலும் விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்படலாம். சகல உள்ளூராட்சி நிறுவனங்களும் தாம் சம்பாதிக்கும் வருமானத்தில் 1% தை நூலக சேவை மற்றும் தகவல் சேவைகளுக்கு ஒதுக்கீடு செய்யலாம். நிதி.

*மத்திய மாகாண நூலக நிதியத்தை தாபித்தல்*

17. மத்திய மாகாணத்தில் நூலகச் சேவையும் தகவல் சேவையையும் மேம்படுத்த, அபிவிருத்தி செய்ய ஊக்குவிக்க உதவுமுகமாக இதன் பிற்பாடு "நிதியம்" எனக் குறிப்பிட்ட மத்திய மாகாண நூலக நிதியம் என அழைக்கப்படும்.

*நிதியத்திற்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்*

18. (அ) அரசினால் கட்டம் கட்டமாக உதவித்தொகையாக வழங்கப்படும் நிதி.

(ஆ) மாகாண சபையினால் வருடந்தோறும் விசேட தேவைகளுக்காக ஒதுக்கித்தரப்படும் நிதி.

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே எத்தகையதோர் தோற்றுவாயினாலும், சன்மானமாக, பரிசாக அல்லது மானியமாக மண்டலத்திற்கு கிடைப்பதாலான நிதிவகைகள் அனைத்தும்.

(ஈ) மாகாண நூலக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியமொன்றிலிருந்து கிடைக்கும் நிதி.

(உ) மண்டலத்தால் பலதரப்பட்ட நடவடிக்கையால் பெறப்படும் நிதி.

*அசையும், அசையா ஆதனங்களை சன்மானமாக வழங்கல்.*

19. (i) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அவற்றின் செயற்பாடுகளுக்கு பிரயோகிப்பதற்கு என ஏதாவது அசையும் அசையா ஆதனமொன்றை நிதியத்தின் பேரில் அமைச்சரினால் மானியமாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(ii) சகல நிதியும் இந்நிதியத்தில் முதலிடப்பட வேண்டும்.

*நிதியத்தின் நிருவாகம்*

20. (i) நிதியம் அமைச்சரின் நிருவாகத்தினதும் பரிபாலனத்தினதும் கீழ் இருத்தல் வேண்டும்.

(ii) மத்திய மாகாண நூலகச் சேவை மண்டலத்தின் நிதிய நிர்வாகத்தின் போது அமைச்சருக்கு ஆலோசனைகள் வழங்குமுகமாக நிதியக் கட்டுப்பாடு சபையொன்று அமைச்சரினால் தாபிக்கப்படலாம்.

(iii) சபையின் நிதி பஞ்சாங்க வருடத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(iv) சபையின் வரவுகள் செலவுகள் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் சபையின் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையாக கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(v) அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆவது வாசகத்தின் பிரகாரம் எல்லா வருடங்களிலும் சபையின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் இணைக்கணக்காய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

(vi) சபையினால் அதன் கடமைகள் பற்றிய அறிக்கையை வருடந்தோறும் தயாரித்து வைக்கப்படுவதுடன், அதனைக் கணக்காய்வாளர் தலைமை அதிபரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(vii) 1971 ஆம் ஆண்டு இல. 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப திருத்தங்களைச் செய்து நிதியத்தின் நிதி நிருவாகம் கணக்குகள் தொடர்பாக அமைதல் வேண்டும்.

*நிதியத்தினால் செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.*

21. (i) நிதியக் கட்டுப்பாட்டுச் சபையினால் மாகாண நூலக சபை மண்டலத்துடன் தீர்மானிக்கும் நிதியின் அளவு.

(அ) நூலகப் புத்தகங்களும் உபகரணங்களும்.

(ஆ) நூலகக் கட்டிடங்கள்.

(இ) நூலக பணியாளர்களின் அபிவிருத்தி.

(ஈ) இந்நியதிச் சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைக்கிணங்க செலுத்தக்கூடிய வேறு சகல கொடுப்பனவுகளும் நிதியத்தின் மூலம் செலுத்தப்படலாம்.

(ii) மண்டலத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகையில் ஏதாவது கடமையை நிறைவேற்றுகையில் மண்டலத்தினால் செய்யப்படும் செலவு ஒன்று அல்லது அவசியத் தேவைகளுக்கான நிதியனைத்தையும் சபையின் நிதியத்தினால் செலுத்தப்படலாம்.

## பகுதி III

### நூலகச்சேவை தகவல் சேவை தொடர்பாக பயிற்சி, ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல்.

*பயிற்சி மற்றும் ஆராய்ச்சிநிறுவனங்களை நிறுவுதல்.*

22. அமைச்சர் அவர்கள் கீழே காணப்படும் விடயங்களுக்காக இதில் இதன்பின் பயிற்சி அளித்தல், ஆராய்ச்சி அல்லது சேவை மத்திய நிலையங்கள் என குறிப்பிடப்படும் சிறப்ப நிறுவனம் அல்லது நிறுவனங்களை அமைத்துக்கொள்ளலாம்.

(அ) நூலக, சேவைகளை ஆய்வு செய்வதற்கான அறிவு, ஆலோசனைகள், பயிற்சிகள் என்பன பெற்றுக் கொடுத்தல் மற்றும் அத்தகைய சிற்ப நிறுவனங்களில் மாணவர்கள் பெற்றிருக்கும் அனுபவங்களை நிச்சயிப்பதற்கான பரீட்சைகள் நடத்துதல் ; மற்றும்

(ஆ) அத்தகைய சிற்ப நிறுவனங்களால் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கலாம்.

பயிற்சி நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான விதிமுறைகளும் ஏனையவையும்

23. அமைச்சரினால் விதிக்கப்படும் இலங்கை தேசிய நூலக சேவை மண்டங்களால் சிபார்சு செய்யப்படும் கொள்கைகளுக்கிணங்க,

(அ) ஆட்சேர்ப்பு விதிகள்.
(ஆ) கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சைகள் பற்றிய விதிகள்.
(இ) தேவைக்கேற்ப நிறுவனங்களுக்கு பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள் , ஆசிரியர்கள், ஆலோசகர்கள் வேறு பதவியணியினர், போன்றோரை நியமித்தலும் அவர்களுக்கு சம்பளங்களை வழங்குவதற்குமான விதிகள் போன்றவற்றை தீர்மானிக்க முடியும்.

சிற்ப நிறுவன வசதிகளைச் செய்தல், ஒழுங்காற்று நடவடிக்கை ஆகியன தொடர்பாக அமைச்சருக்கு உள்ள அதிகாரம்.

24. அமைச்சர் அவர்களுக்கு,

(அ) இத்தகைய வசதிகள் செய்தலுடன் பயிற்சி மற்றும் விடுதிவசதிகள், வேறு விடயங்கள் தொடர்பான கட்டிடங்களை நிர்மாணித்தல், அவற்றை பரிபாலித்தல் மற்றும் உபகரணங்களை வழங்குதலும்,
(ஆ) ஆசிரியர்களினதும் மாணவர்களினதும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தலும், நலன்புரி சேவைகளை ஏற்படுத்தலும் விஸ்தரிப்பதும்,
(இ) இந்த சிற்ப நிறுவனங்கள் மூலம் சான்றிதழ்களை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்தலும்,

## பகுதி IV

### பொது ஏற்பாடுகள்

அமைச்சரின் பொதுவானதும் விஷேட ஏற்பாடுகளும்.

25. (i) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்படட மண்டலங்கள், கமிட்டிகள், சங்கங்கள் அல்லது வேறு அமைப்புகளின் அதிகாரங்களை நிறைவேற்றுதல், கடமைகளைச் செய்தல், பொறுப்புகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அத்தகைய மண்டலங்களுக்கு, கமிட்டிகளுக்கு, சங்களுக்கு அல்லது வேறு அமைப்புகளுக்கு அமைச்சரினால் சாதாரண அல்லது விசேஷ உறுதிகளை விடுக்கலாம். அத்துடன் அவ்வசதிகளை அம்மண்டலங்களை , கமிட்டிகள், சங்கங்கள், அமைப்புகள் மூலம் நடைமுறைப்படுத்தலாம்.

(ii) இச்சட்டவாக்கத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட மண்டலங்கள், கமிட்டிகள், சங்கங்களின் வேறு அமைப்புகளின் சொத்துக்கள் விடயமான அறிக்கை, கணக்கு வேறு தகவல்கள் என்பனவற்றை தமது தேவைக்கேற்றப்படி தமக்கு சமர்பிக்கும்படி அமைச்சரினால் அந்தந்த மண்டலங்களுக்கும், கமிட்டிகளுக்கும் சங்கம் வேறு அமைப்புகள் போன்றவற்றிற்கு ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கலாம்.

(iii) இந்நியதிச் சட்டத்தின்படி தாபிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட மண்டலங்களின், கமிட்டிகளின் சங்கங்களின், வேறு அமைப்புகளின் சகல கடமைகளையும் அல்லது ஒன்றை தமக்கு விமர்சிக்குமாறு பொருத்தமான ஒருவரை அமைச்சர் காலத்திற்கு காலம் நியமிக்கமுடிவதோடு, அவ்வாறு நியமிக்கப்படும் அக்கட்டளைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படும் அனைத்து வசதிகளைச் செய்தலும்; சகல தகவல்களை வழங்குதலும் அம்மண்டலத்தினால் கமிட்டியினால் சங்கங்களினால் அல்லது வேறு அமைப்பினால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

26 (i) மத்திய மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், இந்நாட்டிலே அல்லது வெளிநாட்டிலே நூலக அதிபருக்கோ நூலக அதிபர் சபைக்கோ, நூலக செயற் குழுவிற்கோ நூலக ஆலோசனைச்சபை குழுவிற்கோ பங்கு பற்றவோ அல்லது நிர்வகிக்கவோ அமைச்சர் அவர்களுக்கு கட்டளை இட முடியும்.

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த நூலக வசதிகளுக்கான கட்டளைகளையும் தரக் கட்டுபாடுகளையும் அமைச்சரினால் பிறப்பிக்கப்படலாம்.

(iii) இச்சட்டவாக்கத்தின் கொள்கைகளையும் ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் உயிரூட்டுவதற்குமான கடமைகள் தொடர்பாக கட்டளை பிறப்பிக்கவும் இச்சட்டத்திற்குரித்தான கட்டளைகளைத் தயாரிப்பதற்கும் அச்சட்டதினால் அதிகாரம் வழங்கப்பட்ட சகல விடயங்களுக்குமான கட்டளைகளைத் தயாரிப்பதற்கும் அமைச்சரினால் முடியுமாயிருக்கும்.

(iv) அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளையும் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வெளியிடப்படும் திகதியிலிருந்து அல்லது அத்தினத்தில் அல்லது அக்கட்டளையின் குறிக்கப்படும். பின்னைய ஒரு திகதியிலிருந்து அக்கட்டளை அமுலுக்குவரல் வேண்டும். அமைச்சரினால் ஆக்கப்படும்

அத்தனை கட்டளைகளும் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்பு கூடிய விரைவில் மத்திய மாகாண சபையின் அங்கீகரிப்பை பெறுவதற்கு சபைக்கு முன்வைக்கப்படல் வேண்டும். இவ்விதம் சபையின் அங்கீகாரம்பெற்ற கட்டளையொன்றை அங்கு அனுமதி அளிக்கப்படாத திகதியிலிருந்து வலுவிழந்ததாகக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இருப்பினும் இதன் பிரகாரம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட விடயமொன்றிற்கு பாதகம் ஏற்படாமல் இருத்தல் வேண்டும். அமைச்சரினால் இயற்றப்பட்டதான கட்டளையொன்று அவ்வாறு வலுவிழந்ததாகக் கவனத்தில் கொள்ளும் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும்.

பணிக்கொடை.

*27.* இச்சட்டவாக்கத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டதான மாகாண நூலகச் சேவை மண்டலம் மற்றும் மாவட்ட பிரதேச நூலகச் சேவை மண்டல பிரதிநிதிகளுக்கு மத்திய நூலகச் சேவை மண்டல பிரதிநிதிகளுக்கு/ மத்திய மாகாண நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒருபடுத்தலுடன் அமைச்சரினால் நிச்சயிக்கப்படும் தொகையொன்று பணிக்கொடையாக வழங்கப்படலாம்.

பொருள் கோடல்.

*28.* சொற்கள் தொடர்பாக வேறு விதமாக பொருள்கோடல் தேவைப்பட்டாலேயொழிய இச்சட்டவாக்கத்தில் "அமைச்சர்" என்பது மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சர் என பொருள்படும். அத்துடன் "அமைச்சர்" என்பதும் அவ்விதமே பொருள்படும். "செயலாளர்" என்பது மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் செயலாளர் ஆதல் வேண்டும்.

"நூலகச் சேவை மற்றும் தகவல் சேவை" என்பது அமைச்சு செயாளரினால் அச்சட்டவாக்கத்தின் விடயங்களுக்கான நூலகச் சேவை மற்றும் தகவல் சேவை தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட எத்தகைய விதமான நூலகச் சேவையும் தகவல் சேவையும் உள்ளடக்கும் இச்சட்டவாக்சகத்தில் சொற்கள் தொடர்பாக பொருள்கோடலின் போது சிங்களப் பிரதி மூலப்பிரதியாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

*03-432*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.